சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஓ.எஸ்.96/2015

2020ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் முத்தழகு | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

முதல் விசாரணை

16.03.2020 - நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 3வது சாட்சி. என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில்உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

குறுக்கு விசாரணை

நான் தான் முத்தழகு என்று காண்பிப்பதற்கு ஆதார் அட்டை வைத்திருக்கிறேன். அசல் சாட்சியால் காண்பிக்கப்பட்டது. சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை. சாட்சி சொல்ல லிங்கம் என்பவர் என்னை அழைத்துவந்தார். நான் 5ம்வகுப்பு வரை படித்திருக்கிறேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் அதை படிக்கவில்லை. என் வழக்கறிஞர் கையெழுத்து போடச்சொன்னார், நான் போட்டேன். என் அப்பாவை பெற்ற தாத்தா பெயர் செண்பகதேவர். அம்மாவை பெற்ற தாத்தா பெயர் குப்பையாண்டித்தேவர். லிங்கம் தாத்தா பெயர் கருப்பையா தேவர். லிங்கததின் அம்மா பெற்ற தாத்தா பெயர் தெரியாது. என் தாத்தா உடன் பிறந்தவர்கள் 3 பேர்கள். என் அப்பாவை பெற்ற தாத்தா உடன்பிறந்தவர்கள் 3 நபர்கள். அவர்கள் செண்பகதேவர், சங்கிலிதேவர், பாட்டையாதேவர். வாதி லிங்கம் இடத்திற்காக வழக்கு போட்டுள்ளதாக கூறியுள்ளார். 2 ஏக்கர் பக்கம் வழக்கு போட்டுள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. லிங்கத்தின் அம்மாவை எனக்கு தெரியும், அவர் பெயர் ராக்காயி. ராக்காயி அம்மா பெயர் தெரியாது. சொத்துக்கள் ராக்காயிக்கு எப்படி கிடைத்தது என்ற விபரம் பற்றி தெரியாது. என்னென்ன சொத்துக்கள் கிடைத்தது என்ற விபரம் பற்றியும் தெரியாது. வாதி போட்டுள்ள சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் பற்றி தெரியாது. வாதி லிங்கம் 20 வருடங்களாக கரூரில் வசித்து வருகிறார். வாதி லிங்கம் சொத்துக்களை பொறுத்து என்ன வழக்கு போட்டுள்ளார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது என்றும் அவர் அழைத்ததின் பேரில் சாட்சி சொல்லவந்துள்ளேன் என்றும் சொன்னால் ஆமாம். வாதி லிங்கம் அனுபவம் பற்றி நான் ரிக்கார்டு பார்த்துள்ளேன். வாதி லிங்கம் எந்த ரிக்கார்டும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் வாதி லிங்கமும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள், ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். எனவே வாதி லிங்கத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.